# St Anthony's Girls' College, Kandy

25th Anniversary

# SWASTIKA



# VAANI VIZHA 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From...

## A.L.M. Rifki

*HNDA, MAAI, CAB(ii), MA(ECON), READ*
*Economics Lecturer*

MECK - Kandy
155 A, William Gopallawa Mawatha,
Kandy.
Tel: 077 - 8882323




With Best Compliments From...

## UNITED

BOOK SHOP

NO: 22/1, New Town Digan
Rajawella
081 - 3809559



## UNITED

SHOPPING CENTRE

NO: 23, New Town Digana,
Rajawella

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25th
Anniversary

*The Hindu Society of*

**St. Anthony's Girl's College**
**Kandy**

*Solicits the presence of you*
*to grace the*

**VAANI VIZHA - 2017**

*On*

*Saturday the 23rd of September 2017*

*at*

*the College Main Hall at 9.30 am*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COLLEGE ANTHEM

By the banks of Mahawelli Waters
Circled by the lush green hills
Scenic vistas of kandyan splendour
Rich in regal pageantry

Waving a proud four toned banner
Red and Blue and Green and Gold
There She stands our alma mater
Symbol of our commitment

Alma mater......
We Salute you

We pledge to you our faith the fragrance
of our women wood We'll strive to radiate
In Duty and with valiant deeds
We will be true to you

Lanka's daughter, you will mould us
In strength and Character
Not be judged by creed or riches
But united in harmony

Andrew, Madline,Maurice,Bernard
Though divided we joined hands
In meaningful and right living
Life great purpose to fulfill

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

மூஷிக வாகன மோதக ஹஸ்த
ஷாமர தர்ம விழம்பித சூஷ்த்திர
வாமண ரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

முன்னவனே யானை முகத்தவனே
முக்தி நலம் சொன்னவனே
தூய்மை சுகத்தவனே மன்னவனே
சிறபரனே ஐங்கரனே செஞ்சடையன் சேகரனே
நற்பரனே நின் தாழ் சரண்.

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

மானிவேர் விழி மாதராய் வழுதிக்கு மாபெருந் தேவிகளை
பானல் வாயொரு ரு பாலன் ஈங்கிய னென்று நீ பரிவெயதிடேல்
ஆனைமாமலை ஆதியாய விடங்களிற்பல அல்லல்சேர
ஈனர்கட்கெளி யேனலேன் திருவால வாயர னிங்கவே!
(திருஞானசம்பந்தர்)

## திருவாசகம்

பால் நினைந்துட்டும் தாயினும் சாலப்
நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறச் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக் கெனப் பிடித்தேன்
எங்கெளுந் தருளுவ தினியே.
(மாணிக்கவாசகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலே
மற்றவர ரிறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணி விளக்கைச்
செற்றரவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிர என் கண் குளிர்ந்தனவே.
(திருமாளிகைத்தேவர்)

## திருப்பால்லாண்டு

ஆரார் வந்தார் அமர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயண னொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனுந்
தோார் வீதியிற் றேவர் குழாங்கள்
திசையனைத் தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே.
(சேந்தனார்)

## பெரியபுராணம்

சிவனடியே சிந்திக்குந் திருப் பெருக சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்
(சேக்கிழார்)

திருநச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலகலா வல்லி மாலை

வெண்டாமரைக்கன்றி நின்பத
தாங்க வென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்கு தகாது
கொலோ சகமேழு மளித்து
உண்டானுறங்க வொழித்தான்
பித்தாக உண்டாக்கும் வண்ணம்
சகல கலா வல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய் தர நாற்காலியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்கயாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியோ கனதனக்
குன்றுமைப்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழத் தெள்ளமு
தார் துன்னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடும் கோலா
வுளங் கொண்டு தெள்ளி
தெளிக்கும் பனுவற் புலவோர
கவி மழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலா வல்லியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப்பணித்தருள்வாய்
வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழச் செல்வமும்
தொண்டர் செந்தாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலா வல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பான்த பங்கேருக மென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னே நெடுந் நாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மனமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலா வல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ் சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலா வல்லியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ் தீம்பா
லமுதங் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளளோதிமப் பேடே
சகல கலா வல்லியே

சொல்லிற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்மந் தடிமை கொள்
வாய் நளினாசனஞ்சேர்
செல்விக் கரிதென்றாரு கால
முஞ் சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலத வல்லியே

சொற்கும் பொருட்டு மயிரா மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய் புழைக்கை
நற்குஞ்சரத்ததின் பிடியோ
டசரன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலா வல்லியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண் கண் டளவிற் பணியச்செய்
வாய் படைப் போன் முதலாய்
விண் கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பினுன் போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலா வல்லியே







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம அதிதியின் ஆசீச் செய்தி...

"சொல்லின் கிழத்தி மெல்லிய விணையடி
சிந்தைவைத் தியம்புவல் செய்யுட் கனியே...."

என்ற பாடல் அடிகளுக்கு உரிமைப் பூண்டவளான கலைமகளின் பாரத விந்தங்களுக்கு வந்தனம் தெரிவித்துக் கொண்டு, கண்டி புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியின் தமிழ்ப்பிரிவு 25ம் ஆண்டு வெளியிடும் இச்சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அன்னையாகி பராசக்கி காக்கும் தெய்வமாகிய துர்க்கை,காளியெனப் பெயர்க் கொண்டும்,ஆயக்கலைகள் ஞானம் பலவும் நல்கும் வாணி, சரஸ்வதி என அவதாரமாகியும் செல்வங்கள் எட்டும் தருபவள் அஷ்டலட்சுமி எனவும் வழிப்படப்டுகின்றாள். இவற்றுள்ள அறிவு தெய்வமான சரஸ்வதிக்கு எடுக்கப்படும் திருநாளே வாணி விழாவாகும்.

இவ்வாணி விழாவனது 25ம் ஆண்டு வெள்ளிவிழாவில் கால்பதிப்பதோடு இச்சிறப்பு மலர் மாணவர்களின் எழுத்தாற்றலையும் திறமைகளையும் அனைவரும் கண்டுக் கொள்ள வழியமைத்திருப்பது பராட்டுக்குரியது.

இன்றைய கணணி யுகத்திலே இளம் சமுதாயம் ஆன்ம சிந்தனை பால் ஈடுபட,ஆன்மீக நூல்களை புரட்டிப் பார்க்க இவ்வாறன சிறப்பு மலர் வழி அமைத்துக் கொடுக்கிறது.

இவ்வாணி விழா சிறப்புறவும் இம்மலர் வெளிவரவும் அயராது கடமையுணர்வுடன் உழைத்த வரும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றும் அனைத்து அன்பர்களுக்கும் எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.



P. Satheesh
Additional Provincial
Director (Tamil Unit)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE FROM THE PRINCIPAL

I have great pleasure in contributing this message for the souvnier Swasthika which is to be published annual Nawarathiri Vizha Celebration 2017. Which was organized by the St.Anthony's Girls College Hindu Society.

I'm glad to mention here that equal opportunities are given to all four religions in my esteemed institution.

I was the Hindu Cultural Society all that is best and may this society flourish in all its spiendor.

I wish them all the very best in their future ahed.

Principal
Mrs. Padma Lekamge
St. Anthony's Girls College,
Kandy





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதி அதிபரின் ஆசிச் செய்தி...

கண்டி மாநகரிலே பெண்களுக்கான தனித்துவமான கல்லூரியாகத் திகழும் புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியின் 25ம் ஆண்டு வாணி விழா சிறப்பிதழுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது கல்லூரியானது இவ்வாண்டு வெள்ளி விழாவைக் கொண்டாடுவதோடு பல்வேறுப்பட்ட சமய கலாசார பாரம்பரியங்களை பேணுகின்ற ஒரு கலைக்கூடம் என்று கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைக்கிறேன்.

மாணவர்களை ஒழுக்க சீலர்களாகவும், சமுதாயத்திற்கு ஏற்ற நற்பிரஜைகளை உருவாக்குவதிலும் சமய நிகழ்வுகள் மிக சிறந்த சேவையாற்றி வருகின்றமையும் மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்டும் நல்ல களமாக இவ் சமய நிகழ்வுகள் பங்கேற்றி வருகின்றமை குறிப்பிடதக்கது.

எனவே இவ் நவராத்திரி விழாவும் நூல் வெளியிடும் சிறப்பாக நடைபெற ஆயகலைகள் ஆறுபத்து நான்கையும் எமக்கு அருளும் அன்னையின் பாதம் பணிந்து அருள் புரிய வேண்டுகின்றேன்.

பிரதி அதிபர்
திருமதி. ஜானகி தாமோதரன்
புனிதஅந்தோனியார் மகளிர் கல்லூரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மன்ற பொறுப்பாசிரியரின் இதயத்துளிகள்...

" மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

கண்டி புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியின் 2017ஆம் ஆண்டு நடைபெறும் நவராத்திரி விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் "சுவஸ்திகா" சிறப்பு மலருக்கு பொறுப்பாசிரியர் என்ற வகையில் எனது நல்வாழ்த்துகளை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பாடசாலைகளில் கல்விகற்கும் இளம் மாணவரிடையே ஆன்மீக உணர்வை வளர்க்கும் முகமாக இந்து மாணவர் மன்றங்களின் சேவை எமது சமுகத்திற்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது.

அந்த வகையில் எமது பாடசாலை இந்து மாணவர் மன்றம் பாடசாலை வளங்களுக்கு எற்ப சமய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதனை அவதானிக்கலாம் இனிவரும் காலங்களிலும் எமது இந்து மன்றம் பல செயற்பாடுகளை செய்து, இந்து சமய வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றும் என்பதில் ஐயமில்லை.

பல் கலாசார சமூகத்தை கொண்ட எமது பாடசாலையில் எமது சமய விழாக்களும் சிறப்பாக நடைபெற ஊக்கமும் ஆலோசனைகளையும் வழங்கும் எமது கல்லூரி அதிபர்,தமிழ்ப்பிரிவு பிரதி அதிபர், பிரதி அதிபர்கள் ஏனைய ஆசிரியர்களுக்கும், பொறுப்பாசிரியர் என்ற வகையில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இவ்வருடம் நடைபெறும் வாணி விழாவும் "சுவஸ்திகா" மலர் வெளியிடும் சிறப்பாக நடைபெற அன்னை ஆதிபராசக்தியின் அருள்வேண்டி விடைபெறுகின்றேன்.

"அன்பே சிவம்"

திருமதி. K.பிரியானந்தி
பொறுப்பாசிரியர்
இந்து மாணவர் மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் இதயம் பேசுகின்றது...

அதீத அன்பிற்கு இறைவனும் அடிமை...

மாணவர்களின் ஆளுமை வெளிக்கொணரும் சிறந்த களமாக திகழ்வது கல்விக்கூடங்கள். இங்கு மாணவர்களின் ஆளுமைகள் மட்டுமன்றி விழுமியப் பண்புகளும் மெருக்கேற்றப்படுகின்றமை குறிப்பிடதக்கது. இவ்வாறு மாணர்களின் திறமைகள் வெளிக்காட்டப்படும் சந்தர்ப்பங்களாக சமய நிகழ்வுகள் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எமது கல்லூரியிலும் இந்து மாணவிகளின் ஆளுமையை வெளிக்காட்டும் முகமாக வாணிவிழாவும் சுவஸ்திகா மலர் வெளியீடும் இடம் பெறுகின்றமையை எண்ணி பேருவகை அடைகின்றேன்.

எமது மாணவிகள் அனைவரினதும் முயற்சியின் பயனாக சுவஸ்திகா மலரை தேன் மொழியச் மலரச் செய்துள்ளோம். நடைபெறும் வாணிவிழாவும் மலர் வெளியீடும் சிறப்பக நடைபெற அன்னை ஆதிபராசக்தியின் அருள் வேண்டி விடை பெறுகின்றேன்.

அன்பே சிவம்

இதழாசிரியர்
திருமதி. K.பிரியானந்தி

இணை இதழாசிரியர்கள்
திருமதி. G.மணிமேகலை
திருமதி.U.கிருஷ்ணகௌரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய பொருளாளரின் சிந்தனையிலிருந்து...

பல சிகரங்களை எல்லையாகக் கொண்ட கண்டி நகரத்தில் பெண்கள் கல்லூரியான புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியில் நவராத்திரி விழா நடைபெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் பல சவால்களையும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் உள்ளனர். அனைத்து சாவல்களிலிருந்தும் வெற்றி கொள்வதற்கு சமய விழுமியப் பண்புகள் பெரிதும் வேண்டப்படுகின்றது.

எனவே இக்காலகட்டத்தில் மாணவர்களிடையே சமய விழுமிய நெறிகளை வளர்ப்பதற்கு எமக்கு வாணி விழா துணை புரிகின்றது.

எனவே எமது கல்லூரியின் 25வது வாணி விழாவும் நூல் வெளியீடும் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன். இவ்விழாவிற்கு ஒத்துழைப்பும் ஊக்கமும் நல்கிய நல் உள்ளம் படைத்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

“மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

ஆசிரிய பொருளாளர்
திருமதி.U.கிருஷ்ணகௌரி
புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2017 இந்து மன்ற ஆசிரியர் குழாம்



**Seated Left to Right :** Mrs. Swarna Rathnayaka (Deputy Principal of Primary Section), Mrs. Ganga Jeyawardhana (Deputy Principal), Mrs. T. Janaki ( Deputy Principal Tamil Medium), Mrs. Padma Lekamge ( Principal) , Mrs. Sriyani Rathnayaka (Deputy Principal) Mr. D. kodithuwakku (Deputy Principal), Mr. Rathna Kumar

**Standing Left to Right :** Mrs. G. Manimegalai, Mrs. K. Priyanandhi, Mrs. G. Anusha, Mrs. S.P. Kuneswary, Mrs. r. Jeyasudha, Mrs. k. Rajeswary, Mrs. k. Amutha

**Absent :** Mrs. Vijayashri, (Deputy Principal) , Mrs. S. Parimala, Mrs. Krishnagowry, Mrs. Rukshanthy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AGENDA

01. Arrival of the chief guest
02. Vinagaka Stuthi
03. Lighting the oil lamp
04. School Anthem
05. Welcome speech
06. Pooja
07. 2 minutes of silence
08. Pushpanjali
09. Introduction to the theme
10. Making of vaani vizha - 2017
11. A speech in tamil
12. Address by the deputy principal
13. 1- 5 prize giving
14. A speech
15. Folk dance
16. Address by the principal
17. 12-13 prize giving
18. Primary dance
19. Speech in Sinhala
20. Address by the special guest
21. Inter-school prize giving
22. Address by the chief guest
23. 6-9 prize giving
24. Publishing the souvenir
25. Peacock dance
26. 10-11 prize giving
27. Honoring the transferred teachers
28. Bajanai
29. Vote of thanks
30. National antham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவ இதழாசிரியரின் இதயத்திலிருந்து

எமது பாடசாலையான கண்டி புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியில் நவராத்திரி தினத்தை முன்னிட்டு இந்து மாணவர் மன்றத்தால் வருடந்தோறும் வெளியிடப்படும் இந்த "சுவஸ்திகா" சஞ்சிகையில் எனது உரையை வழங்குவதில் இந்து மாணவர் மன்ற இதழாசிரியர் என்ற ரீதியில் பெருமிதமடைகிறேன்.

கல்வி,செல்வம் வீரம் எனும் மூன்றும் செல்வங்களையும் வேண்டி முறையே சரஸ்வதி,இலக்குமி,துர்க்கை ஆகிய முப்பெருந் தேவியரை வணங்கி அனுஷ்டிக்கும் நவராத்திரி விரதமானது எமது பாடசாலையில் வருடந்தோறும் விழாவாக கொண்டாடப்படுகிறது. இவ்விழாவானது மாணவர்களிடம் சமயபற்றையும் பக்தியையும் வளர்க்கிறது. மேலும் இதனையொட்டி வெளியிடப்படும் "சுவஸ்திகா" சஞ்சிகையானது இந்து மாணவர்களின் எழுத்தாற்றலை மெருகூட்ட வழிவகுக்கின்றது.

இத்தகைய சிறப்பு மிகு சமய விழாவை ஒழுங்கமைத்து நடத்தும் இந்து மாணவர் மன்றத்தில் நானும் ஒரு பங்கு வகித்தமை எனக்கு பெருமகிழ்ச்சியளிக்கின்றது. இவ் விழா சீரும் சிறப்புமாக குறைவின்றி நடைபெற உதவிய அனைத்து உயரிய உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கிறேன். மேலும் நமது இந்து மாணவர் மன்றமும், "சுவஸ்திகா" சஞ்சிகையும் மென்மேலும் வளரவும், இறையருள் அனைவருக்கும் கிட்டவும் எல்லாம் வல்ல ஆதிபராசக்தியை வேண்டி நிற்கிறேன்.

"இருட்டாசையம் குழிவீழாமல் காமூவிரண்டு பேய்கள்
வெருட்டாமல் கா என்று வேண்டுகிறேன் இந்த வீணனையும்
பொருட்டாக எண்ணி அருட்கோல் அளித்த நீ புன்னகைத்து
புரட்டாசித் திங்களில் வந்தருள்வாய் அன்ன பூரணியே"

-அகத்தியர்-

கீர்த்தனா மிராஜ்
13T வர்த்தகப் பிரிவு
மாணவ இதழாசிரியர்
இந்து மாணவர் மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவரிடமிருந்து சில வரிகள்...

" சைவ நன்நெறிதான் தழைத்தோங்குக தெய்வ
வெண்திருநீறு சிறக்கவே"

என்பதாகப் தினங்தோறும் போற்றப்படுகின்ற மெய்சமயமாம் சைவசமயத்தை கொண்டெழும் சைவசமயிகளாகிய நாம் ஆண்டுதோறும் அன்னையாகிய பராசக்தியை காக்கும் தெய்வமாகிய துர்க்கை, காளியென பெயர் கொண்டும், ஆயக்கலைகள் ஞானம் பலவும் நல்கும் வாணி சரஸ்வதி என அவதாரமாகவும் செல்வங்கள் எட்டும் தருபவள் அஷ்டலக்ஷ்மி எனவும் கொண்டு நவராத்திரி விரதத்தை அனுட்டித்து வருகின்றோம்.

அந்த வகையில் இயற்கை எழில் கொஞ்சும் மத்திய மலைநாட்டின் தலைநகரான கண்டி மாநகரிலே, கல்வித்துறையிலும், விளையாட்டுத் துறையிலும் தனக்கெனதொரு தனியிடம் கொண்டு விளங்கும் கண்டி புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியின் இந்து மாமன்றம் தனது 25வது ஆண்டு நிறைவையொட்டி பெருமையுடன் வழங்கக் காத்திருக்கும் நவராத்திரி விழாவை முன்னிட்டு இவ்வருடமும் "சுவஸ்திகா" எனும் நூலை வெளியிடும் சந்தர்ப்பம் ஏற்பட்டதையெண்ணி பெருவகையடைகின்றேன்.

இந்நூலானது நமது பாடசாலையின் இந்து மாணவர்களின் எழுத்தாற்றல் மற்றும் சிந்தனைகளை வலுப்படுத்தம் ஓர் தூண்டுகோலாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை அதுமட்டுமன்றி இந்நூலினை சிறப்பாக வெளியிடுவதற்கு அன்புகரங்களை தந்துதவிய அனைத்துள்ளங்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். இம் மன்றத்தின் பணிகள் எதிர்காலத்திலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமொல்லாம்"

செல்வராஜ் சுகனுஜா
தலைவர்
இந்து மாணவர் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் உள்ளத்திருந்து...

"மேன்மைக்கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

வரலாற்று சிறப்புமிக்க கண்டி மாநகரிலே இன, மொழி பேதமின்றி கல்விக்கண் திறக்கும் புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியில் வருடந்தோறும் கோலாகலமாக நடைபெற்று வருகின்ற வாணிவிழா நிகழ்வானது 25வது ஆண்டில் தடம் பதிக்கின்ற இவ்வினிய தருணத்தில், இந்து மன்றத்தின் அயராத உழைப்பின் விளைவாக வெளிவரும் "சுவஸ்திகா" இதழுக்கு இந்து மாணவர் மன்ற செயலாளர் என்ற வகையில் எனது உரையை வழங்குவதில் பெருமிதமடைகிறேன்.

இந்தவகையில் வருடந்தோறும் கொண்டாடப்படும் வாணிவிழா நிகழ்வானது. மாணவர்கள் மத்தியில் அறிவினையும், ஆளுமை விருத்தியும், தேடல் திறனையும் அதேவேளை சமயப்பற்றையும், பக்தியையும் விருத்தி செய்யும் வகையில் அமைவது குறிப்பிடதக்கதாகும்.

மேலும் இவ்விதழானது உங்கள் கைகளில் தவழ உதவிக்கரம் நல்கிய அனைத்து உயரிய உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு, இனிவரும் காலங்களிலும் புது மெருகுடன் "சுவஸ்திகா" இதழ் வெளிவருவதோடு இந்து மாணவர் மன்றத்தின் பணிகளும் மேலும் சிறப்பாக தொடரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்று கூறுவதோடு. தொடர்ந்து வரும் காலங்களிலும் சிறப்பாக வாணிவிழாவை நடாத்திச் செல்ல எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றேன்.

" இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

கௌஷல்யா உதயகுமார்
செயலாளர்
இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மன்றம் 2017

அதிபர்
திருமதி. பத்மா லேகம்கே.

பிரதி அதிபர்
திருமதி. ஜானகி தாமோதரன்.

பொறுப்பாசிரியர்
திருமதி. K.பிரியானந்தி

பொருளாளர்
திருமதி. S.கிருஷ்ண கௌரி

ஏனைய ஆசிரியர்கள்
திருமதி. S.பரிமாளா
திருமதி. S.P.குனேஷ்வரி
திருமதி. G.அனுஷா
திருமதி. K.ராஜேஸ்வரி
திருமதி. K.அமுதா
திருமதி. S.ஜெயசுதா
திருமதி. மணிமேகலை
திரு. இரத்னகுமார்
திருமதி. ருக்ஷாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes &*
*Compliments From......*

# PALAYAKATS

## MAGA STORE

**DEALERS IN ELECTRICAL & HOUSEHOLD APPLIANCE**
**GENTS & LADIED CLOTHING**

No.76,Colombo Street,kandy.20000 Sri Lanka.
Tel/fax : 0814 951314 /0812 223654
Facebook: Palayakats Facebook.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயம்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாக கொண்டது சைவசமயம். இது எப்போது தோன்றியது என தெரியாது.சைவ சமயத்தில் பல் வேறு கடவுள்கள் உள்ளனர். சைவ சமயத்தில் தேவாரம் பாடிய நாயன்மார்கள் உள்ளனர். சைவ சமயத்தில் பல விரதங்கள் உண்டு. சைவ சமயத்தில் பல பண்டிகைகள் உண்டு அதாவது தைப்பொங்கல், புதுவருட பிறப்பு, என்பன பண்டிகைகளாகும். சைவ சமயத்தில் பல நூல்கள் உண்டு.

சைவ சமயத்தவர் நீராடி, திருநீறு அணிந்து கோயிலுக்குச் செல்வார்கள். சைவ சமயத்தில் சிறந்த சமய நற்பழக்கவழக்கங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றை நாமும் கடைப்பிடிப்போம்.

Y. பிரவின்யா

தரம்-3T


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி

1. புராட்டதி மாதத்திலே அமாவாசைக்குப் பின்வரும் ஒன்பது நாளும் நவாரத்திரிப் புண்ணிய காலம் எனப்படும்.
2. இந்த நாட்களில் முப்பெரும் தேவிகளுக்கு இராத்திரியில் விசேஷமாக பூஜைகள் நடைபெறும்.
3. துர்க்கை வீரத்தையும்,லக்ஷமி செல்வத்தையும், சரஸ்வதி கல்வி ஞானத்தையும் கொடுக்கும்.
4. முதல் எட்டு நாளும் பணியாரம்,பழம், முதலியவை உட்கொண்டு மகா நவமியன்று உபாவாசம் செய்தல்.
5. நவாராத்திரில் பத்தாம் நாள் துர்க்கா தேவி மகிடாசுரனைக் கொன்ற பாவனை காட்டப்படும்.
6. அரண்மனைகளில் வீடுகளில் நவாராத்திரி பூஜை கொண்டாடப்படுகின்றது.
7. மகா நவமி தினத்தில் சரஸ்வதி பூஜை எல்லா வீடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.
8. தேவி மகிடாசுரனைக் கொன்று ஜயம் பெற்ற நாள் விஜயதசமி என்றுங் கூறுவதுண்டு.
9. விஜயதசமி தினம் மானம்பு நாள் என்றும் வழங்கப்படும்.
10. அன்றைய தினம் அட்சராரம்பம்,வித்தியாரம்பம் செய்வது நன்று என்ற கொள்கையும் வழக்கமும் உண்டு.

G.நிதுர்ஷனா

Gr-6T





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ சித்தாந்த நூல்கள்

1. திருவுந்தியர்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞானபோதம்
4. சிவஞான சித்தியார்
5. இருபா இருபது
6. உண்மை விளக்கம்
7. சிவப்பிரகாசம்
8. திருவருட்பயன்
9. வினாவெண்பா
10. போற்றிக்கொடி
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடுதூது
13. உண்மை நெறி விளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்

## பதினாறு வகைப் பேறுகள்

1. வீரம்
2. வித்தியம்
3. சந்தானம்
4. துணிவு
5. தனம்
6. சந்ததி
7. போகம்
8. அறிவு
9. அழகு
10. பொறுமை
11. அறம்
12. குலம்
13. பூரணவயது
14. சௌபாக்கியம்
15. அதிதானியம்
16. நோய்நீக்கம்

S.கவிஷா

Gr-8T





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை

# முப்பெறும் தேவியரின் வருகை !!

மூன்றுலகும் ஈன்றான் ஈசன் - அம்
மூவுலகை காக்கத் தான் படைத்தானோ
முப்பெரும் தேவிகளை........

வெள்ளைத் தாமரையில் வீற்றுருப்பாள் - என்
உள்ளக் கோயிலிலே உரைந்திருப்பாள்
இல்லை யென்னாது அளித்தருள்வாள்
கல்வி எனும் செல்வத்தை.....

செந்நிற முகத்தவள் - அவள்
செங்கமலத்தில் உறைபவள்
செல்வம் என்ற ஒன்றையே
செம்மையாக தருபவள்.....

துன்பங்கள் நீங்கவே – நம்
துயரங்கள் தீரவே – வீரத்தை
துணிபவள் – அவள்
துர்க்கையான உருவினள்.....

பூக்கள் பூத்து குலுங்கின
பூஞ்சோலை எங்கும் பெருகின
இன்பம் எங்கும் பரவின
இன்முகங்கள் மலர்ந்தன.....

அகிலம் காத்துக் கிடக்கிறது – தம்
அகம் மகிழ்ந்து முகம் மலர – அந்த
மலர்கள் காத்துக் கிடக்கின்றன - இம்
மங்கல ரூபினிகளின் பாதம் சரணடைய....

என் மனம் காத்துக் கிடக்கிறது
என் தாயவளின் வருகையை
வாழை சாய்ந்திருக்க தென்னோலை பரந்திருக்க
வந்தவள் என் தாயவள் - வசந்தமிகு
விஜயமாய் விஜய தசமியில் !!!!!



தஷ்வினி ராமதாஸ்
தரம் - 11 தமிழ் பிரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய புனித நூல்கள்

- ஞானம்
  - அபரஞானம் (அறிவு பூர்வமானது)
    - லௌகீகம்
    - ஆன்மிகம்
      - ஸ்ருதிகள் — நிலையான தத்துவங்களை கூறுபவை
        - நான்கு வேதங்கள் (இருக்கு, யசுர், சாமம், அதர்வனம்)
          - கர்ம காண்டம்
            - சம்ஹிதங்கள் (மந்திரங்கள்)
            - பிராமனங்கள் (சடங்குகள்)
          - ஞான காண்டம்
            - ஆரண்யங்கள் (ஆழ்ந்த சித்தனைக்குறியது) → உபதிடகங்களில் முடிவடைகின்றன
      - ஸ்மிருதிகள் — நிலையான தத்துவங்களின் செயன்முறை பிரயோகத்தை கூறுபவை
        - உபவேதங்கள் → மந்திரங்கள், தனுர் வேதம், காந்தர்வ வேதம், ஸ்தாபத்திய சாஸ்திரம்
        - வேதாங்கங்கள் → சிக்ஷா, கல்ப, வயாக்நண, நிருக்த, சந்தஸ, ஜோதிஷ
        - வேத உபாயங்கள் → நியாய, வைசேஷிக்க, சஙக்யா, யோகா, மிமாம்ஸ, வேதாந்த
        - ஸ்மிருதிகள் → 18 ஸ்மிருதிகள் முக்கியமானது மனுஸ்மிருதி
        - புராணங்கள் → 18 புராணங்கள் 46 உப புராணங்கள்
        - இதிகாசம் → இராமாயணம், மகாபாரதம்
  - பரஞானம் (உணர்வு பூர்வமானது)



தொகுப்பு - சுஜானி ஞானப்பிரகாசம்
தரம் - 11 தமிழ் பிரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் யார் பக்கம் ?

வழக்கமாக எப்போதும் பார்க்கின்ற கோயில்,
அன்றும் மட்டும் கொஞ்சம்....
ஆதிக வேண்டுதல்களோடும் காணிக்கைகளோடும்
பரபரப்பாகவே இருந்தது

ஓவ்வொரு சனிப்பெயர்ச்சிக்கும்,
குருப்பெயர்ச்சிக்கும்...
இறைவனை விட அதிகம் மகிழ்பவர்
கோயில் பூசாரியாகத்தான் இருக்கிறார்

தட்டில் விழும் துட்டுக்கள் பார்த்து
யாருக்கம் புரியாமல்,
ராசியும் நட்ஷத்திரமும் சொல்லி
அர்ச்சனை செய்தால்
ஆண்டவனுக்கு எப்படி புரியும்

அரச அலுவலகமும் ஆண்டவன் கோயிலும்
மக்களுக்கு ஒன்று தான்
பணம் கொடுத்தால் எல்லாம் நடக்குமென்ற
நம்பிக்கை அவர்களுக்கு......

இப்படியே போனால்
வானவாசம் போல பணவாசம் கூட
பிடித்து விடும் இறைவனுக்கு !

எல்லோரையும் காக்க இறைவன் போதும்.
ஆனால், இறைவனை காக்க
பூட்டுக்கள் பூட்டி
கோயில்கள் வேண்டியிருக்கின்றன.

இத்தனையும் பார்த்து அமைதி காக்குமந்தக் கடவுள்
யார் பக்கமோ?
கடவுளுக்காக ஏமாறும் மக்கள் பக்கமா?
இல்லை... கடவுளை வைத்து ஏமாற்றும்
கயவர்கள் பக்கமா?

மிதுஷிகா சந்திரகுமார்
13T வணிகப்பிரிவு
உப தலைவர்
இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ச்சி பொங்கும் சைவ மரபு

" மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஆதியும் அந்தமும் காணாத ஒரு மரபு வழி நெறியே சைவநெறியாகும். ஆங்கிலேயரின் ஆட்சி காலத்தில் இருந்து பிரசித்து பெற்று விளங்குகின்ற ஓர் உன்னதமான சமயமே சைவசமயம். பழங்காலத்தில் எமது சைவசமயம் ஆங்கிலேயருக்கு அடிமைப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆறுமுகநாவலர், விவேகானந்த சுவாமிகள் போன்ற பெரியோர்கள் அரும்பாடுபட்டு எமது சைவநெறியை காப்பாற்றினார்கள். எமது சமயம் என்றுமே ஒழுக்க விதிகளை மாத்திரமே எடுத்துரைக்கின்றன. எமது மனதை ஒரு நிலைக்கு கொண்டுவருவதற்காகவே விரதங்கள் என்று ஒரு முறை கடைப்பிடித்து வருகிறது. இதில் நவராத்திரி விரதம் மிக சிறப்புமிக்கது.

நவராத்திரி விரதம் முழுமையாக 10 நாட்கள் கடைப்பிடிக்கபடுகின்றது. இந்த விரதகாலம் முப்பெரும்தேவிகளின் சங்கமமாக திகழ்கின்றது. இதில் 10 நாள் அதாவது விஜயதசமி அன்று ஆயுத பூஜை நடைபெறும். இந்த நாளன்று எமது ஆயுதங்களை வைத்து பூஜை செய்தால் நாம் செய்யும் வேலை சுபமாக இருக்கும்

இப்படிப்பட்ட விரதகாலத்தில் நாமும் இறைவனை வழிப்பட்டு இறையருளை பெறுவோமாக.

S.திலானி

Gr-7T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா சிறப்புற நல்வாழ்த்துக்கள்....

SHA BAG INDUSTRIES

DEALERS IN ALL VARIETY OF BAGS

**SHA BAG INDUSTRIES**
No.10, New Town, Digana, Rajawella.
Tel: 0812 376590
No.17b Kotugodella Veediya, Kandy.
Tel: 0812 225280

*Best Wishes With Compliments From......*

Ranmuthu

JEWELLERS & PAWN BROKER

RANMUTHU Jewellers & Pawn Broker
No.84/b, Kotugodella Veediya,
Kandy.
Tel: 0814 950420 / 0812 200912

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயமும் சூழலும்

எமது சைவ சமயம் மனிதனை மண்ணில் நல்லவண்ணம் வாழ வழி காட்டவதோடு, மேலும் இறையின்பம் எனப்படும் முக்தி இன்பத்திற்கும் வழி காட்டுகின்றது. ஒருவன் தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று எண்ணாது யாவரும் வாழ வேண்டும் என்று போதிப்பதுவே எமது சைவ சமயம்.

பற்பல மேன்மைகளை உடைய சைவ சமயம் எமக்கு அகத்தேயும் புறத்தேயும் நின்று உண்மை நெறியை உணர்த்துகிறது. சைவ சமயத்தை உள்நின்று உணர்த்தும் மெய்பொருள் சிவன் ஆவார். இத்தகைய மேம்பாட்டினை உடைய எம்பெருமான் நாம் வாழும் சூழலிலும் நிலைக் கொண்டுள்ளார்.

நாயன்மார்கள் நால்வரும் சூழலோடு இறைவனை இணைத்து பதிகம் பாடியதிலிருந்து இறைவனுக்கும் சூழலுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பை எம்மால் அறிய முடிகின்றது. திருநாவுக்கரசரின் "ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே" என்ற பதிகத்தின் மூலம் இறைவன் சூழலிலுள்ள ஓசையிலும் ஏனைய ஒலிகளிலும் நிலைப்பெற்றுள்ளான் என்பது தெளிவாகின்றது.

சூழலில் நிகழும் அனைத்து நிகழ்வுகளுமே இறை தத்துவத்தை அடிப்படையாக கொண்டவையே ஆகும். சொருப நிலையில் மோலன உள்ளொளியாய் விளங்கும் இறைவன் உயிர்கள் மீது கொண்ட கருணையினால் தடத்த நிலையில் தன் நிலையை விட்டு ஒருபடி இறங்கி படைத்தல், காத்தல், அழித்தல்,மறைத்தல்,அருளல் போன்ற ஐந்தொழிகளை புரிகின்றார். சூழலில் நிலைத்த தன்மைக்கும் இறைவனின் ஐந்தொழில்களே காரணப்பொருளாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தை உள்நின்று உணர்த்தும் பரம்பொருளானவர் புனிதமான உள்ளத்திலேயும் தூய்மையான சூழலிலேயயே நிலைக் கொள்கிறார். இறைவன் குடிகொள்ளும் தூய்மையான சூழலை அவரது அடியவர்களான நாமே அமைத்துத் தர வேண்டும்.

தினமும் அதிகாலையில் எழுந்து சுய சுத்தம் பேணி, வீட்டையும் சுற்றுப்புற சூழலையும் தூய்மைப்படுத்தி பின் மஞ்சள் நீரையும், சாணம் கலந்த நீரையும் பயன்படுத்தி சூழலை புனிதப்படுத்த வேண்டும் மேலும் நந்தவனம் அமைத்தல் துளசிமாடம் அமைத்தல் முதலிய புண்ணியச் செயல்களின் மூலம் சூழலில் தெய்விகத்தை ஏற்படுத்தலாம்.

சூழலானது தெய்விகத்தன்மை மிகுந்ததாக இருக்கும் போதே மனதில் நல் எண்ணங்களும், இறை சிந்தனையும் வளர்க்கப்படுகின்றது. சமயத்தை நோக்கும் போது அதன் நிலைப்புத் தன்மையில் சூழலே பெரும் பங்காற்றுக்கின்றது என்பது புலனாகிறது. ஒரு ஆன்மாவை தூய்மை மிகுந்ததாக்கி அதை வீடு பேற்றில் இட்டுச் செல்வதிலும் சூழலின் பங்களிப்பு உண்டு.

இரவு பகல் மாறி மாறி தோன்றுவதும் மலைகள் பெரும்பாலும் ஓரே மாதிரியிருப்பதும் எந்தவொரு தாவரமும் குறிப்பிட்ட காலத்தில் பூத்து, காய்த்து, கனிந்து இறுதியில் உலர்ந்து பட்டுப் போவதும், உயரினங்களும் அகிலத்தில் ஜனித்து, வளர்ந்து மடிந்து போவதும் சூழலின் இறையதிசய தத்துவங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகம தத்துவங்களாகும் சூழலிலேயே மறைந்துள்ளன இயற்கைச் சூழலில் நிலைப்பெற்றுள்ள கல்லால் மரமே முக்கியின்பத்திற்கு வழிகாட்டுகின்றது. அண்டமாளும் ஈஸ்வரனின் சடாமுடியில் மிளிர்ந்து நாம் வாழும் சூழலின் அங்கமான பிள்ளைப் பிறையாகும். ஈசன் கரத்திலேந்தி கூத்தாடுவது அனலையாகும். இறைவன் தலையில் சூடியிருப்பது புனித கங்கையாகும்.

இறைவனின் ஆனந்த சொருபத்தையும் அவரது செயற்பாடுகளையும், எண்ணங்களையும் அவர் படைத்த சூழலிருந்த அறிந்து கொள்ளக்கூடியதாயுள்ளது பற்பல உயிரினங்களையும் தாவரங்களையும் படைத்துக் காத்ததிலிருந்து இறைவன் சூழலின் சமநிலையை காக்கின்றார் என்பது புலனாகிறது.

திருவிழாக் காலங்களில் நாம் வாழும் சூழலானது புத்துணர்வு பெறுகிறது. அதற்குக் காரணம் பல காலம் கோயிலில் லயித்திருந்த இறைவன் விழாக் காலத்தில் மக்களோடு மக்கள் வாழும் சூழலில் வசிப்பதாகும். எனவே விழாக் காலங்களில் சுற்றுப்புறச் சூழலை புனிதம் மிகுந்ததாக பேணுதல் அவசியமாகும்.
மேற்கூறப்பட்ட விடயங்களின் மூலம் சைவத்தை உள்நின்று உணர்த்தும் மெய்பொருள் சூழலில் இயற்கையாக உறைய விரும்புவது புலனாகியிருக்கும். எனவே சூழலைக் காத்து இறை அன்பிற்கு பாத்திரமாவோமாக.


" ஓம் சாந்தி "


பாபு பாவித்ரா
தரம்-10T





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes With Compliments From......*

iColour Desing
ALL KIND OF PRINTING AND COSMETICS

City Complex
No.39, Madawala Road, Katugasthota, Kandy.
Tel : 071 7313390

*Best Compliments From......*

KM

KANDY MEDICALS
WHOLESALE,RETAIL DISPESING CHEMISTS

No.96, D.S.Senanayaka Veediya,
Kandy.
Tel : 081 2222563

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி விழாவின் முக்கியத்துவம்...

தேவி வழிபாட்டின் தொன்மைக்கு புரட்டாதி மாதத்தில் நடைபெறும் நவராத்தரி வழிபாடே சான்றாகும். வட நட்டார் இதனைத் "தசரா" என்றழைப்பர். இவ்வழிபாடு எப்போது தோன்றியதென்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.மிகத் தொன்மை வாய்ந்தது. வீடு தோறும் இவ்வழிபாடு மிகத் பண்டை தொட்டே நடைபெற்று வந்துள்ளது இச்சக்கி வழிபாடு சிறிது பெயர் மாற்றங்களுடன் உலகம் முழுதும் பரவி இருந்துருக்கின்றது.

புரட்டாதி மாதத்தில் அமாவாசையைத் தொடர்ந்து வருகின்ற 9 நாளும் நவராத்திரி எனப்படும்.பத்தாவது நாள் விஜயதசமி எனப்படும். சக்திக்கு ஒன்பது இராத்திரி நவராத்திரி சிவனுக்கு ஒரு இராத்திரி அது சிவராத்திரி. அதிலிருந்தே சக்கி வழிப்பாட்டின் மேன்மை விளங்குகின்றது. மைசூரிலும் வங்காளத்திலும் தசராக் கொண்டாட்டம் ஒரு தனி சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகின்றது. தமிழர் வளம் பெருக்கி விளைவிக்கும் மண்ணை நிலமகள் என்றார்கள். செல்வத்தை திருமகள் என்றார்கள். கல்வியைக்க கலைமகள் என்றார்கள்.வீரத்தை வீரத்திருமகள் அல்லது துர்க்கை என்று அழைக்கின்றார்கள்.

மக்களுக்கு வீரம்,செல்வம்,கல்வி மூன்றும் தேவை என்பதற்கே முதல் மூன்று நாட்களும் துர்க்கை வழிபாடகவும் அடுத்த மூன்று நாட்களும் இலக்குமி வழிபாடாகவும் இறுதி மூன்று நாட்களும் கலைமகள் வழிபாடாகவும் கொண்டாடி வருகின்றனர்.10 ஆவது நாள் விஜயதசமி அல்லது வெற்றித்திருநாள் எனப்படும். தேவி மகிடாசுரனை வதைத்த திருநாள்.மகிடம் என்பது தாமச குணத்தை போக்கி சாத்தவீக குணத்தை கொடுதத் திருநாள். அன்றைய தினம் பெருங்கொண்டாட்ட தினமாகும். புதிய பிள்ளைகளுக்கு வித்தியாரம்பத்திற்கு ஏற்ற நாள்.

நவராத்திரியில் வரும் அஷ்டமி மஹாஷ்டமி என்றும் பெயர் பெறும் ஆதாலல் இதனை "மஹாநோன்பு" என்று அழைப்பர். சரத் கால சம்பந்தம் பெற்ற ஆச்வீன மாதத்தில் வருவதால் இதற்கு சாரத நவராத்திரி என்று பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போல சித்திரை மாதத்தில் வசந்த நவராத்திரி கொண்டாடப்படுகின்றது. சரத்து,வசந்தம் ஆகிய இரு பருவகாலங்களும் எமனுடைய கோரப்பற்கள் என வர்ணிக்கப்படுகின்றது. இக்காலங்களில் நோய்கள் மலிந்து மக்கள் பெருவாரியாக நாசம் அடைகின்றனர். இக் காலத்தில் நடைபெறும் தேவி பூஜையால் மக்கள் மலினமடைவதைத் தடுக்கலாம் என்று தேவி புராணம் கூறுகின்றது.

கலையழகு வெளிப்படுத்தும் பண்டிகையே கொலு வைக்கும் நவராத்திரிப் பண்டிகையாகும் மார்க்கண்டேய புராணத்தில் மகாராஜ சுரதா என்பவன் தன் குருவின் ஆலோசனைப்படி காளி ரூபத்தை மண்ணில் செய்து வழிபட்டு அருள் பெற்றதாக கூறப்பட்டுள்ளது. இதனை உணர்த்தும் விதமாகவே கொலுக் காட்சியில் அனைத்து அம்மன் பொம்மைகளையும் முறைப்படி அடுக்கி வைத்து பூஜிக்கிறோம். இக்கொலு வைக்கும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகின்றது. தெய்வப் பிராத்தனை, கலையார்வம் இவைகளை பிரதிபலிப்பதே இவ்விழாவின் முக்கியம்சம்.

சரஸ் என்றால் நீர் என்றும் ஒளி என்றும் அர்த்தம். சூரியன் ஒளியை அளிப்பதால் அவனுக்கு “சரஸ்வான்” என்று ஒரு பெயரும் உண்டு. தங்குதடையின்றி பிரவாகமாக வருகின்றது. வாக்கு தேவியின் அருள் இருந்தால் வார்த்தைகள் தங்கு தடையின்றி பிரவாகமாக வெளி வருவதற்குச் சந்தேகம் என்ன?

இராவணனைச் சம்ஹரிக்க இராமர் சக்தியைப் பூஜை செய்தார்.அதனை கொண்டாடுவதே நவராத்திரி என்று வங்க மொழியில் இராமாணயம் எழுதிய கிருத்திவாய் எ்னற கவி எழுதியிருக்கிறார்.ஆகவே இவ்வளவு சிறப்புள்ள நவராத்திரி விரதத்தைப் பிடித்து, விழாவையும் கொண்டாடுவோம்.

சே.சௌமியா
தரம்-9T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி சிந்தனை....

புத்தக துள்ளுறை மாதே
பூவில் அமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குறையுடை யாளே
மூவுல குந்தொழு தேவி
செப்பு கவித்தனை முலையாய்
செவ்வரி ஓடிய கண்ணாய்
முத்து நிறத்து வெண்பல்லாய்
முருக்கம் பூமேனி நிறத்தாள்
தக்கோ லந்தின்ற துவர்வாயாய்
சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலும் உன்னைத் தொழுவோம்
எழுத்தறி புத்தி பண்ணுவிப்பாய்
ஆக்காய் எம்பெரு மாட்டி
அழகிய பூவணை மீதாய்
நோக்காய் என்மிடி தீர
நொடிக்கும் பிராமணத்தியே நோக்காயே
சாலு நெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூஜை பண்ணி
பாலொடு பழத்தை நிரப்பி
பராவித் தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமஸ்து
ஞானக் கொழுந்தே நமஸ்து
கல்விக் கரசே நமஸ்து
கணக்கறி தேவி நமஸ்து
சொல்லும் பொருளே நமஸ்து
சூச்சும ரூபி நமஸ்து

K.நிக்ஷலா 13T
வர்த்தகப் பிரிவு



*Best Wishes From......*

# ESWRAN'S BOOK SHOP

WHOLESALE,RETAIL DEALERS
IN ALL KIND OF BOOKS,
WEDDING CARDS,
STATIONARY
& INTERNET CAFÉ
WITH TYPE SETTING

No.1/126, Colombo Street,kandy. Tel / fax : 0812 220820

*Best Compliments From......*

# NIPPON
ELECTRICAL

**Dealers In**
**Single Phase**
**three Phase**
**Electrical Goods**
**Imported Light Fittings Etc.....**

No.54, Kotugodella Veediya,
Kandy, Srilanka.
Tel : 081 2224577
Fax : 081 2221406
Mobile : 0777 426004
Residence : 0812 300441

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவின் அவசியமும் அதன் பெருமையும்...

நீதியும் நேர்மையும் குன்றிச் செல்லும் இக்காலக்கட்டத்தில் அநீதியும் அதர்மமும் செழிக்கின்றது. படித்திராத பாமர மக்களும் கூட அநியாயமாக சிக்கி நீதியை இழக்கின்றனர். அநீதியே தழைத்தேங்க வேண்டும் என்று நினைப்பவர்களை அடியோடு ஒழிக்க நாம் அறிவை பயன்படுத்தவேண்டும் இவ்விடத்தில் அறிவு என்பது அவசியமாகிறது. மானிடர்களாக பிறந்த நம் அனைவருள்ளும் அறிவு என்ற கருவி நன்றாகவே நிரம்பியுள்ளது. அதனை தீட்டாதவர்களே அதிகம் எனவே அறிவு என்பது எமக்கு மிகவும் அவசியமான தொன்றாக கருதப்படுகின்றது.

அதனை பெற நாம் செய்ய வேண்டியது அறியாமையை கற்க வேண்டும். மண்ணையும் பொன்னாசயையும் விடத்து அறிவை வளர்ப்பதில் ஆசையை புகுத்த வேண்டும். மண்ணும் ஒரு நாள் அழிந்தது விடும் ஆனால் அறவால் நிரம்பியவர்களின் புகழ் அவர் அழிநதாலும் என்றும் அழியாது நிற்கவேண்டும். "அறியாமையே துன்பத்தின் ஆணிவேராகும்"என அறிஞர் புளுட்டோ கூறுகின்றார். அறியாமையினாலும் ஆண்டவனை மதியாமையாலும் அன்று பட்ட அனுபவங்களையும் துன்பங்களையும் சரித்திரங்கள் எமக்குக் கூறுகின்றன. அன்று ஒருசிலராவது அறிவுடையவர்களாக இருந்ததனாலேயே இன்று மானுட சமூகம் ஓரளவாவது நிலைத்து நிற்கின்றது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது எனவே அறவானது அவசியமாகும்.

எனது நாட்டினுடைய பொருளாதாரத்தை பொறுத்தவரை " உண்டிர் கொடுத்தார் உயிர் கொடுத்தார்" என்ற நிலையில் இருக்கின்றோம். உணவும் உறையுள்ளும் என்ற இவ்விரண்டும் மட்டும் கிடைத்தால் சொர்க்கமென நினைப்பவர்கள் பலர் காரணம் அறிவுடையோர்களும் சிலவேளைகளில் அறிவற்ற செயல்களில் ஈடுபடுவதால் அப்பாவி மக்கள் அகதிகளாகவும் அநியாயமாகவும் உயிர் துறக்கின்றனர். இதற்கு காரணம் மனிதனானவன் அறிவை மறந்துவிட்டான் அல்லது அதனை முறையாக பயன்படுத்துவதில்லை என்றே கூற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு காரியத்தை செய்யினும் அறிவை பயன்படுத்தவேண்டும் " அதுவே வாழ்வின் முழுமை" என்பதை நாம் மறந்துவிடலாகது. பாடசாலையிலும் கூட நாம் ஆசிரியரிடம் தெரியாதவற்றை கேட்டும் கற்றுக்கொள்கின்றோம் இதனாலேயே ஆசிரியர் என்பது அல்லது என்ற பதம். "அறியாமையை நீக்கி அறிவைத் தருபவள்" என்பதனை உணர்த்துகின்றது எனலாம். எனவே, எமக்கு அறிவினைப் புகட்ட ஆட்கள் உண்டு எனவே நாமும் ஏனையோருக்கு உதவ வேண்டும். இன்றைய சமுதாயத்தை பொறுத்தவரை அன்னதானமும் அறிவுத்தானமும் எந்த அளவுக்கு அவசியம் என்பது பற்றி பின்வரும் பாடலடி அழகே எடுத்துரைக்கின்றது.

"அன்னதானம் உயர்ந்ததென அரைவர் உடம்பையே
வளர்க்கும் அன்னதானம் தனிற் கோடி மடங்கு மேலாய்
- இலைத்தானம்
என்னத் தானங்களினுமது ஏற்ற முடைந்து மதி வளர்க்கும்
சொன்னத் தான மதற் களித்தல் தூய தானமாகுமாரே"

என இப்பாடலடி கூறுகின்றது.

அதாவது அன்னதானத்தினையும் விட உயர்ந்தாக யாவற்றிலும் மேலானதாக அறிவின் பெருமை அதன் அவசியம் என்பன இப்பாடலினுடாக புலத்தப்படுகின்றது. அன்று ஔவையார் நான்கு கோடிப் பாடங்களுக்கு உள்ளப் பொருளை நான்கு வரிகளிலே "சுட்டப்பழம் வேண்டுமா சுடாதபழம் வேண்டுமா" என எல்லாம் வல்ல இறைனான சிவனின் மைந்தனிடமே வினாவினார். இதனை தான் அறிஞர்களும் "கடுகு சிறிதானாலும் காரம் பெரிது" என்பர். இதற்கினங்க சிறிய சொற்களிலேயே பாரிய வினாக்களை எழுப்பமுடியும் என்பதனை உணர்த்தி அதற்கு நாம் நன்கு அறிவை தீட்ட வேண்டும் ஏன்ற கருத்தினையும் மறைமுகமாக உட்செலுத்ததுகின்றனர் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனாலேயே அன்று வாழ்ந்த அறிஞர்களும் புலவர்களும் அறிவு நிறைந்த சிப்பிகளாக இருந்து அதனுடைய அவசியத்தை எமக்கும் உணர்த்திச் சென்றுள்ளார்கள் என தெளிவாக கூறலாம். அன்று அவர்களுடைய இவ் அறிவுத்திறமையே இன்று நம் அனைவரும் பயன்பெறும் காலத்தின் கண்ணாடியாக பொக்கிஷங்களாக திகழும் இலக்கியங்கள் என்று கூறினால் மிகையாகாது. அவ் பொக்கிஷங்களினுடாக மக்கள் எவ்வாறு வாழ வேண்டும்,எப்படி வாழ வேண்டும் என்ற நல்ல விழுமிய கருத்துக்களை எடுத்துக்காட்டியுள்ளது என்று கூறினால் மிகையாகாது. அறிவின் அவசியத்தையும் அதன் பெருமை மற்றும் அதன் மகிமையை பற்றிஔவையார் எமக்கு அருளித்தந்த ஒரு பாடலை நோக்குவோம்

" இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் அனிது அறிவினைச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுடையோரைக்
கனவிலும் நனவிலும் காண்பதுதானே"

என்ற பாடல் இதனை அழகே வெளிப்படுத்துகின்றது.
எனவே மானிடர்களாக பிறந்த நம் அனைவருக்கும் அறிவு அவசியமாகும். அதனை நாம் முறையாக பயன்படுத்தாமையே இதற்கு காரணமாகும் அறிவினுடைய அவசியத்தை பற்றி மேலும் பல புலவர்கள் கருத்துரைக்கின்றனர் அவற்றை நோக்கின் " வள்ளுவன் தன்னை உலகிற்க்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என பாரதியாரால் பெருமைப்படுத்திக் கூறப்பட்ட பொய்யாமொழிபுலவரும் தமது திருக்குறளிலே அறிவின் அவசியத்தை திறம்பட எடுத்துரைகின்றார், அவற்றையும் நோக்குவோம்.

"அறிவற்றம் காலமும் கருவி செறுவார்க்கும் உள்ளக்கழிக்கால் ஆகா அரண்"
அதாவது இறுதிக்காலம் வரைக்கும் காக்கும் கருவியாம் அறிவு என்றும் பகைவராலும் அழிக்க முடியாத கோட்டையை போல இருப்பதும் அறிவே ஆகும் என அறிவின் பெருமையையும் சிறப்பும் அழகே எடுத்துரைக்கப்படுகினறது எனலாம் மேலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" எப்பொருள் யார்வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என இக்குறட்பாவும் அறிவுடைமையின் சிறப்பை கூறுகின்றது. அதாவது எந்த விடயத்தையும் யாரிடமிருந்து கேட்டுக்கொண்டாலும் அதன் உண்மையை ஆராய்ந்தறிந்து செயற்படுவதே அறிவாகும் எனவே இவைகளும் கூறுவது அறிவென்பது நமக்கு அவசியம். சேற்றில் விழுந்தவனுக்கு கிடைத்த ஊன்றுக்கோல் போல துன்பத்திலிருந்து அறிவைப் பயன்படுத்தி எவ்வித இடையூறையும் வெற்றிக்கொள்ள இயலும் எனவே அத்தகைய பொக்கிஷததை அடைந்துக்கொள்ள நாம் அனைவரும் முயலவேண்டும் அறியாமை என்ற இருளை நீக்கி அறிவாகிய செழுஞ்சுடர் சோதியை நம் அனைவர் வாழ்விலும் மிளரச்செய்யவேண்டும். அத்தகைய சிறப்பு வாய்ந்ததுவே அறிவு ஒரு நாட்டிக்கு மன்னனாக இருப்பினும் அவனிடம் கல்வியறிவு இல்லையேன் அவன் பெறுமை தான் இதனையே ஔவையார்,

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் மன்னனில் கற்றோனே சிறப்புடையவன்"

அதாவது நூலறிவோடு நுண்ணறிவு மிக்கவர்களை எந்த துரும்பும் வெற்றிக்கொள்ள இயலாது எனக் கூறப்படுகின்றது.
எனவே மேற்குறிப்பிட்டவை அனைத்தும் அறிவின் அவசியத்தையும், அதனுடைய பெருமையையும் அழகே எடுத்துரைக்கின்றது எனலாம். இலக்கிய ஆழ்கடலின் அறிவு முத்துக்கள் நிறைந்த சிப்பிகள் ஏராளம் அவற்றை இனங்கண்டு அறிவின் மகியை உணர்ந்து தரணியில் அறிவுள்ளவர்களாக திகழ நம் ஒவ்வொருவரும் எண்ண வேண்டும் நம் அனைவரும் அறிவு நிறைந்த முத்துக்களாக திகழ்ந்து வாழ்க்கையின் எல்லா இடையூறுகளையும் சஞ்சலங்களையும் இலகுவாக வெற்றிக்கொள்வோம்.

கௌஷல்யா உதயகுமார்
13T கலைப்பிரிவு
செயலாளர்
இந்து மாணவர் மன்றம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபுலானந்தரின் கருத்துக்கள்...

நாம் இப்படி இருப்பதற்கு
நமோ பொறுப்பு - இனி எப்படி
இருக்க வேண்டும் என்று
விரும்புகிறோமோ. அப்படி
நம்மை செய்து கொள்வதற்கான
ஆற்றலும் நம்மிடம் உள்ளது?
